# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள்முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 011/மா/2017

ஆணை எண். 79/2017

நாள் : 27/04/2017

திரு டி. ராஜமாணிக்கம்,
திருநெல்வேலி – 627 004.
– முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திருநெல்வேலி.
– எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாநகராட்சி, பேட்டை, பாண்டியாபுரம் தெற்கு தெரு, எண்.44 E, முகவரியில் வசிக்கும் திரு T. ராஜமாணிக்கம் அவர்களது 19.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 23.01.2017 அன்று பெறப்பட்டு 11/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி மாநகராட்சி, பேட்டை, பாண்டியாபுரம் தெற்கு தெரு, எண்.44 E, முகவரியில் வசிக்கும் திரு T. ராஜமாணிக்கம் என்பவர், திருநெல்வேலி மாநகராட்சி, பேட்டை வினைதீர்த்த விநாயகர் கோவில் தெரு கதவு எண்.1–வது 64 ABC-ல் குடியிருந்து வரும் திரு S. சிவசங்கரன் என்பவர் தான் குடியிருக்கும் வீட்டின் கார்செட் பகுதியை இடித்து, மாநகராட்சி அனுமதி வழங்காத நிலையில் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து பங்களா கட்டி வருகிறார் என்றும், இக்கட்டிடம் முடிக்கப்படும் தருவாயில் உள்ளதென்றும் தெரிவித்து, அக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தக் கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் அறிக்கைக் கோரப்பட்டது. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு 03.12.2016 நாளிட்ட கடித அனுமதி எண்.278/2016/TP4-ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டதென்றும், மாநகராட்சி அனுமதி வழங்கிய வரைபடத்திற்கு மாறாகக் கட்டிடப் பணிகள் நடைபெற்று வந்ததால், 1994–ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டப் பிரிவுகள் 282(1) & (2), 283,447 மற்றும் 471(2)–ன் கீழ்

கட்டிட உரிமையாளரான திரு S. சிவசங்கரன் அவர்களுக்கு தற்காலிக அறிவிப்பு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என 06.02.2017 நாளிட்ட கடித எண்.295–2016–TP4-ல் மாநகராட்சி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 20.03.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மாநகராட்சி அனுமதி வழங்காத நிலையில் மாநகராட்சிப் பகுதியில் திரு S. சிவசங்கரன் அவர்களால் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும், இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

4. கட்டிட வரைபட அனுமதிக்கு முரணாக கட்டிடம் கட்டுவதைக் கண்டறிந்து திருநெல்வேலி மாநகராட்சி அதிகாரிகளும் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாக, கட்டிட அமைப்புகளை மாற்றி அமைத்து கூடுதலாக கட்டியிருக்கும் கட்டிட பாகங்களை அப்புறப்படுத்த வேண்டுமென தெரிவித்து 20.01.2017 நாளிட்ட தற்காலிக அறிவிப்பொன்று, உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் சம்பந்தப்பட்ட நபருக்கு வழங்கப்பட்டுள்ளதும் மேற்குறிப்பிட்ட தற்காலிக அறிவிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முரண்பாடுகளைக் களையத் தவறும் நிலையில், மாநகராட்சி சட்டம், பிரிவு 447,471(2)–ன் கீழ் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு தொடரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் மாநகராட்சி ஆணையர் அறிக்கை மூலம் தெரிய வருகிறது. இந்நேர்வில், திரு S. சிவசங்கரன் அவர்களுக்கு 03.12.2016 நாளிட்ட கடித எண்.278/2016/TP4–ல் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்ட அனுமதி வழங்கிய சுமார் 45 நாட்களில், கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதையும், கட்டி அனுமதிக்கு முரணாக கட்டிடம் கட்டியதை அப்புறப்படுத்தக்கோரி மாநகராட்சி 20.01.2017அன்று தற்காலிக அறிவிப்பொன்று வழங்கியதையும் கருத்தில் கொண்டு, முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டை இம்முறைமன்ற நடுவம் பரிசீலனை செய்தது. கட்டிடம் குறுகிய நாட்களிலேயே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்டக் கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்பே கட்டிடப்பணிகள் தொடங்கப்பட்டு குறுகிய நாட்களில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது எனக் கருத நேரிடுகிறது.

5. இந்நேர்வில், கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டிவருவதை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதைத் தடுக்க திருநெல்வேலி மாநகராட்சி அலுவலர்கள் தவறியுள்ளனர். பிற உள்ளாட்சி அமைப்புகளிலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. எனவே, அனுமதியற்ற கட்டிடங்களும், விதிகளுக்கு முரணாக கட்டப்பட்ட கட்டிடங்களும் புற்றீசல்கள் போல் பெருகிவருகின்றன. கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட ஒருசில கட்டிடங்கள் குறித்த விதிமீறல்கள் மட்டுமே இம்முறைமன்ற நடுவம் மற்றும் உயர்அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. காலப்போக்கில் விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படவும் நேரிடுகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் இதுபோன்ற செயல்பாடுகள் குறித்து இம்முறைமன்ற நடுவம் தனது கடும் அதிருப்தியை தெரிவிக்கிறது. மேலும், 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் பிரிவு 47-A மற்றும் 16.12.2010 நாளிட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை எண்.289–ன் படி, கட்டிட அனுமதி இல்லாமலும், அனுமதிக்கு மாறாகவும் கட்டப்படும் கட்டிடங்களை தடுப்பதற்கான அதிகாரங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. எனவே, இந்நேர்வில் கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடப் பகுதியை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு திருநெல்வேலி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

6. மேலும், இந்நேர்வு போன்று அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்களை கண்டறிந்து உரிய விதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியம். எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் தங்களது அதிகார வரம்பிற்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதுசம்பந்தமாக உரிய அறிவுரைகள் வழங்கவும் இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2017– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 27–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு. டி. ராஜமாணிக்கம்,
44–ஈ, பாண்டியாபுரம் தெற்கு தெரு,
பேட்டை, திருநெல்வேலி – 627 004.

மாநகராட்சி ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி.

நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை – 600 108.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்

நகல்

அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.
(மின்னஞ்சல் )